

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.9.2023) நடிகர் சத்யராஜ் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அண்மையில் மறைந்த அவரது தாயார் நாதாம்பாள் காளிங்கராயர் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆகியோர் உள்ளனர்.

### சென்னை எழும்பூர் - விழுப்புரம்:

## 130 கி.மீ. வேகத்தில் ரயில்களை இயக்க திட்டம்!

சென்னை,செப்.8-

சென்னை சென்ட்ரல் கூடூர்,சென்னை சென்ட்ரல் அரக்கோணம், ஜோலார்பேட்டை, சென்னை சென்ட்ரல்ரேணிகுண்டா ஆகிய வழித்தடத்தில் மணிக்கு130 கி.மீ. வேகத்தில் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதுகுறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

முக்கியமான வழித்தடங்களில் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் விரைவு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இதற்காக, ரயில் பாதைகளின் தரத்தை உயர்த்துவது சிக்னல் தொழில்நுட்ப மேம்பாடு, வளைவுகளை நீக்குவது, தேவையற்ற நுழைவுகளை அகற்றுவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! இதுவரை ‘இந்தியா’வைச் சேர்ந்த குடிமகனாகிய நான் என்னை ‘இந்தியன்’ என்று சொல்லிக்கொண்டேன். ‘ பாரத் ‘ என்று நாட்டின் பெயரை மாற்றிவிட்டால், நான் என்னை எப்படிச் சொல்லிக் கொள்வது ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **அமெரிக்காவைச் சேர்ந்தவன் அமெரிக்கன்; சீனாவைச் சேர்ந்தவன் சீனன்; ரஷ்யாவைச் சேர்ந்தவன் ரஷ்யன்; என்பதைப் போல, இந்தியாவைச் சேர்ந்தவன் இந்தியன் என்று இதுவரை சொல்லிக் கொண்டான்.**

**இனி ‘பாரத்’என்று பெயர் மாற்றம் ஆகிவிட்டால், பாரத் நாட்டுக்காரன் - பாரத் தேசத்துக்காரன் - பாரத் நாட்டின் குடிமகன் என்று தான் சொல்லிக்கொள்ள முடியும் ! பின் என்ன ‘பாரத்தான்’ என்றா சொல்ல முடியும்?**



சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக மாணவரணித் தலைவர் ராஜிவ் காந்தி தமது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## 6 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

### தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை,செப்.8-

6 ஐஏஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

6 ஐஏஎஸ் அதிகாரிகளை பணியிடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்,

சென்னை மாவட்ட கலெக்டராக ராஷ்மி சித்தார்த் ஜகடே நியமனம்.

நீலகிரி மாவட்ட கலெக்டராக அருணா நியமனம்.

வரலாற்று ஆய்வு ஆவணக் காப்பக ஆணையராக நந்தகோபால் நியமனம்.

நில நிர்வாகத்துறை இணை ஆணையராக அம்ரித் நியமனம்.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழக மேலாண் இயக்குநராக ஹனீஸ் சாப்ரா நியமனம்.

தமிழ்நாடு ஊரக மேம்பாட்டுத் திட்ட தலைமைச் செயல் அதிகாரியாக சித்ரா விஜயன் நியமனம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆலந்தூர் மண்டலத்தில்

## ரூ.70.72 கோடியில் கழிவுநீர் குழாய்கள் புதுப்பிக்கும் பணி!

### அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 8-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் ரூ.70.72 கோடி மதிப்பீட்டிலான கான்கிரீட் கழிவுநீர் குழாய்களை மாற்றி புதிய வார்ப்பிரும்பு குழாய்கள் அமைக்கும் திட்டப் பணிகளை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு நேற்று (07.09.2023) தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ரூ.70.72 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் கான்கிரீட் கழிவுநீர் குழாய்களை மாற்றி புதிய வார்ப்பிரும்பு குழாய்கள் அமைக்கும் திட்டப் பணிகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் நேற்று ஆலந்தூர் மண்டலம், ஏரிக்கரை சாலையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது :

ரூ.70.72 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலம், ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் ஆகிய பகுதிகளில் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் மூலம் ஆதம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், பழவந்தாங்கல், தில்லை கங்கா நகர் மற்றும் பி.வி. நகர் பகுதிகளில் உள்ள 2 இலட்சத்து 59 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். இப்பணிகள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி, மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் ரூ.524.62 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டப் பணிகளும், ரூ.864.66 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் நடைபெற்று வருகிறது. இதன்மூலம், 14 இலட்சத்து 85 ஆயிரத்து 835 பொதுமக்கள் பயன் பெறுவார்கள். இப்பணிகள் அனைத்தும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதும், மேலும், கழிவுநீரை சுத்திகரித்து முறையாக வெளியேற்றும் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையைப் பொறுத்தவரை நாளொன்றுக்கு 1000 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பல்லாவரம் மற்றும் தாம்பரம் பகுதிகளுக்கும் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் நாளொன்றுக்கு 2000 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னைக்கு அருகிலுள்ள சிக்கராயபுரம் குவாரியிலுள்ள நீரினை மறுபடியும் செம்பரம்பாக்கம் ஏரிக்கு அனுப்பி சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் சிக்கராயபுரம் குவாரியில் மழை நீரினை சேகரித்திட நீர் வளத் துறையின் சார்பில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

நெதர்லாந்து நாட்டின் உதவியுடன் 1000 ஏரிகள் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகரில் பொதுமக்களின் வசதிக்காக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிதாக 1000 கட்டணமில்லா கழிவறைகள் கட்டப்பட்டு மக்கள் உபயோகத்திற்கு விரைவில் கொண்டு வரப்பட உள்ளது எனவும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மேயர்ண ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ்குமார், செயல் இயக்குநர் செ.சரவணன், ஆலந்தூர் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி. பூங்கொடி ஜெகதீஸ்வரன், சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் ஆர். சிவமுருகன், மேற்பார்வைப் பொறியாளர் எஸ்.பிரேமா, பகுதிப் பொறியாளர் எச். எஸ்.கல்யாணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசு சார்பில் ரூ.770 கோடி மானியத்துடன், ரூ.2,134 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு,

## 28,102 புதிய தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்!

### ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!



சென்னை,செப்.8-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் (07.09.2023) நேற்று சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் தொழில் வணிக ஆணையரகத்தின் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் ரூ.770 கோடியே மானியத்துடன், ரூ.2,134 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு, 28,102 புதிய தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டு மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை அடைய வேண்டும். அதே வேளையில், மகளிர், மாற்றுத்திறனாளிகள், பட்டியலினத்தவர், பழங்குடியினர், சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்தவர்களும், தொழில்முனைவோராக உருவாக்கும் வகையில் பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும். முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தில் பொது மேலாளர்கள் தனி கவனம் செலுத்தி, பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் அடித்தட்டு மக்களை தொழில்முனைவோர்களாக மாற்ற முழு முயற்சியுடன் பணிபுரிய வேண்டும்.

மேலும் துறையால் செயல்படுத்தப்படும் முதலீட்டு மானியம், ஊதிய பட்டியல் மானியம், பின் முனை வட்டி மானியம் போன்ற 10 வகை மானியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றினை குறித்த காலத்தில் எந்த காலதாமதமும் இன்றி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த திட்டங்கள் குறித்து புதிய தொழில்முனைவோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழிலை அடிப்படையாக கொண்ட பிரதான் மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டத்தை வேளாண் தொழில் சார்ந்த மாவட்டங்களில் முழு முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் அளிக்கும் வகையில் அவர்களையும் தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கும், விவசாயிகளுக்கும், MSME தொழில் நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக செயல்பட்டு இத்திட்டத்தை முழுமையான அளவில் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்திட வேண்டும்.

முதல்வர் அவர்களின் சமச்சீர் பொருளாதாரத்தினை செயல்படுத்துவதில் MSME நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானது. அதனை செயல்படுத்தும் விதமாக MSME நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய மானியங்கள் மற்றும் கடனுதவிகளை உரிய நேரத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான அரசு செயலர் வி.அருண் ராய் தொழில் வணிக ஆணையர் திருமதி.அர்ச்சனா பட்நாயக் தொழில் வணிகத் துறை கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சாவ் தொழில் வணிகத் துறையின் கூடுதல் இயக்குநர் சே.மருதப்பன், ஏகாம்பரம் மற்றும் மாவட்ட பொது மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுமக்களிடம் பணம் வாங்கிக்கொண்டு பரிசோதனை செய்த

## தனியார் நிறுவன ஒப்பந்தம் ரத்து!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடவடிக்கை!

தேனி, செப்.8-

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு, செய்தபோது பொது - தனியார் கூட்டில் ஒப்பந்தத்தில் உள்ள கிருஷ்ணா டைகனாஸ்டிக்ஸ் நிறுவனம் பொதுமக்களிடம் பணம் வாங்கி கொண்டு பரிசோதனை செய்ததால் ஒப்பந்தம் ரத்து செய்தும், தேசிய நலவாழ்வு குழுமம் மூலம் புதிய எம்.ஆர்.ஐ பரிசோதனை இயந்திரம் தருவித்து இலவசமாக சேவை வழங்கவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மருத்துவமனையில் உள்ள ஸ்கேன் பரிசோதனை மையம் கிருஷ்ணா டைகனாஸ்டிக்ஸ் (Krishna Diagnostics) பொது - தனியார் கூட்டில் (PPP Mode) ஒப்பந்தம் செய்யப்பட்டு நடைபெற்று வந்தது. அந்த நிறுவனம் பொது மக்களிடம் இருந்து ரூ.2500 பெற்று பரிசோதனை மேற்கொண்டதை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்த போது கண்டறிந்து, உடனடியாக அதற்குரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், இன்று ஒருநாளில் மட்டும் பரிசோதனைகள் மேற்கொண்ட 10 பேரில் 7 பேரிடம் பணம் வாங்கியது உறுதி செய்யப்பட்டது.

உடனடியாக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் கிருஷ்ணா டைகனாஸ்டிக்ஸ் நிறுவனம், பொது - தனியார் கூட்டில் (PPP Mode) செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய உத்தரவிட்டார்.

மேலும், தேசிய நலவாழ்வு குழுமத்தின் மூலம் புதிய எம். ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம் தருவிக்கவும், அதற்குரிய பணியாளர்களை நியமிக்கவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தினார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (07.09.2023), தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் பயணக் கட்டணச் சலுகை அனுமதிச் சீட்டுகளை வலைதளம் வாயிலாக பயனாளிகள் பெற்றிடும் வகையில் முதற்கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், செயல்படுத்திட ஏதுவாக இத்திட்டத்தினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் (பொ) க.குணசேகரன், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (P.T.C.S.) மேலாண் இயக்குநர் மூ.அ.முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் உதகை சேரிங்கிராஸ், தோட்டக்கலைத்துறை கூட்டரங்கில், மாவட்ட தொழில் மையம், மகளிர் திட்டம், தாட்கோ, ஆவின், தோட்டக்கலைத்துறை, வாழ்ந்துக்காட்டுவோம் திட்டம், மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் அனைத்து துறை சார்ந்த கடன் வழங்குதல் மற்றும் கடன் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாமில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் , நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா முன்னிலையில் நேற்று (07.09.2023) 136 பயனாளிகளுக்கு ரூ.11.81 கோடி மதிப்பில் பல்வேறு கடன் உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், மாவட்ட தொழில் மைய மேலாளர் சண்முகசிவா, வங்கி மேலாளர் சசிகுமார் சக்கரபாணி உட்பட பலர் உள்ளனர்.